(7) அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதி 41 (3) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, 'பேரவையின் 41(3)வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்''.

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

(8) கவன ஈர்ப்புகள்

(அ) ஆலங்குளம் தமிழ்நாடு சிமெண்ட் ஆலையின் தூசி வீச்சால் பக்கத்திலுள்ள பயிர்கள் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். அண்ணாமலை, இரா. தாமரைக்கனி, இரா, அமிர்தராஜ், ஒ. சுப்பிரமணியன் சோ. அழகர்சாமி ஆகியோர் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து உள்ளார்கள்.

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலூகா தமிழ்நாடு சிமெண்ட் ஆலை தூசியின் வீச்சால் அதைச் சுற்றி 10 மைல் அளவுக்குப் பயிர் பச்சைகளுக்குச் சேதமேற்பட்டுவருவது பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத் துறையில் ரூ. 7.48 கோடி முதலீட்டில் இராமநாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு சிமிண்டு ஆலையை நிறுவியுள்ளது. இந்த சிமிண்டு ஆலையில் ஈரத்தயாரிப்பு முறையில் சிமிண்டு உற்பத்தி செய்யும் இரண்டு சூளைகள் உள்ளன. ஒவ்வொரு சூளையும் நாளொன்றுக்கு 600 டன் சிமிண்டு உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. முதல் சூளை 1970-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலும், இரண்டாவது சூளை 1971-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலும், உற்பத்தியை துவங்கியது.

இது போன்று ஈரத் தயாரிப்பு முறை சிமிண்டு ஆலைகளில் 5 முதல் 10 சதவிகிதம் சுண்ணாம்பு தூசி, புகை போக்கியின் வழியாக சூளைகளிலிருந்து வரும் வாயுவுடன் சேர்ந்து வெளியேறுகிறது. சுற்றுப்புறச் சூழ் நிலைபாதிப்பை குறைக்கும் வண்ணம்